மதுரை சீடு குழந்தைகள் பேரவை வழங்கும் தனிச்சுற்று இதழ்

# புதுயுகம்

மலர்கின்ற உலகை நற்பணிகளால் காப்போம்

MADURAI SEED

உலகு 3 | பணிமடல் 11 | ஏப்ரல் – மே 2009 | நன்கொடை ரூ. 2/-

## உள்ளே....

- பாட்டு
- கவிதை
- விடுகதை
- செய்து மகிழ்க
- தெரிந்துகொள்வோம்
- ப்ளீஸ் சிரிக்காதீங்க
- ஒரு குடம் தண்ணி ஊத்தி



P.மகேஸ்வரி X



M.தங்கலெட்சுமி XII



P.சரவணக்குமார் XII

**Education is the most powerful weapon... To change the World. - Nelson Mandela**

புதுயுகம் தனிச்சுற்று சிற்றிதழ், மதுரை சீடு வழிகாட்டலுடன் மதுரை சீடு குழந்தைகள் பேரவை குழந்தைகளால் வளமைக் கல்வி நோக்கில் வெளியிடப்படுகின்றது


# நாளிதழ்களில் மதுரை சீடு

## மீடியா டைம்ஸ்

NO.1 மாலை நாளிதழ்

உள்ளதைச் சொல்வோம் ! நல்லதைச் செய்வோம் !

15-05-2009





# SEED brings laughter in the life of these children

G P Sunita | ENS
Madurai, May 17

FOR the children residing at Karumbalai slum area, summer time is the brightest spot in their otherwise dreary life as they take part in the camp - Vasantha Mugham organised by Madurai SEED, a city based NGO.

With ten years of service at Karumbalai, one of the most thickly populated poor areas of Madurai, Karthik Bharathi, Managing Trustee, SEED says, "working with children especially the most underprivileged energises me."

The centre helps the children and young people with their school work and also with the transition from their working lives to the time spent in front of books. It does this through study groups and training, organises excursions and a range of creative activities such as dance, music, art classes and others. More than 300 children are benefited by SEED.

Children oriented movies like 'Children of Heaven', 'Where is my friends home', 'Salaam Bombay', 'The way Home', 'Le Peuple Migrateur' and 'Life is beautiful' are screened during the camp. After seeing the movies, the children are encouraged to participate in a discussion regarding the movies.

"When people generally treat us like untouchables, SEED's initiative helps us to feel confident and to move on in the mainstream," says one of the students at the camp.

Cartoon making, pot painting, art from waste, card making combined with cultural programme, makes the five-day summer camp a wonderful experience for these children.

# வசந்த முகாம் பாடல்கள்

பாடலாசிரியர். சு.முருகபாண்டி




இந்த முகாம் வசந்த முகாம் (2)
இந்த முகாம் எங்களுக்கு (2)
மகிழ்ச்சி பொங்க பாடிடுவோம்
சிங்காரமாய் நாம் ஆடிடுவோம் (2)
சித்திரம் பல நாம் வரைந்திடுவோம்
சில கருத்துக்களை நாம் புகுத்திடுவோம் (2)
பல கலைகளை நாம் கற்றிடுவோம்
பல சாதனைகள் நாம் படைத்திடுவோம் (2) (இந்த முகாம்)



கும்தலக்கடி கும்தலக்கடி பாட்டு
இது வசந்த முகாம் கேம்பு தந்த பாட்டு (2)
நாம வந்தோம் பாரு வசந்த முகாம் கேம்பு
கும்தலக்கடி ஊக்கடி கும்தலக்கடி (கும்தல)
குதூகலமாய் இருப்போம் கும்மாளமாய் பறப்போம்
ஆராவாரம் செய்வோம் ஆனந்தமாய் படிப்போம்
உற்சாகமாய் போடு கொண்டாட்டமாய் (கும்தல)




சாரசாரயாய் வாங்க எறும்பு போலவே
சக்கரமாய் சுத்திடுவோம் வாங்க நாமலே (சார)
சின்ன பிள்ளைகளே வாங்க சித்திரம்போல
சிக்கனத்தை கற்றிடுவோம் சீக்கிரமாக (சார)
கூடி வாழ்ந்தால் நமக்கு கோடி நன்மையே
கொண்டாட்டமாய் சேர்ந்திடுவோம் வாங்க நாமலே (சார)



தென்னை என்றால் எழுந்திடு
தேங்காய்என்றால் அமர்ந்திடு
அமர்ந்து கொண்டே கை தட்டு
அமர்ந்து கொண்டே கண்சிமிட்டு
நிமிர்ந்து கொண்டே தலையாட்டு
வெற்றி என்று தோள்தட்டு (தென்னை)

தோல்வி என்றால் தோள் கொடு
வெற்றி என்றால் பங்கிடு
துன்பம் வந்தால் சபதமிடு
இன்பம் எனக்கென்று கூறிவிடு (தென்னை)

# கரடிக்கு தேன்குடிக்க வழி சொல்லுங்களேன்



M.மகுடபதி B.E.
வாண்டுகளுக்காக


# துர்கா சொன்ன கதை

ஒரு காட்டில், முயல், ஆமை ஒன்றாக போய் கொண்டிருந்தன. வழியில் ஒரு முட்டைகோஸை பார்த்து நான் தான் சாப்பிடுவேன் என முயலும் ஆமையும் சண்டை போட்டன. அதை சிங்கம் பார்த்து கொண்டு இருந்தது. பிறகு சிங்கம் இருவரில் யார் முதலில் அவரவர் வீட்டை தொட்டு விட்டு வருகிறார்களோ அவர்கள் முட்டைகோஸை சாப்பிடலாம் என கூறியது. முயல் தன்னால் வேகமாக முடியும் என பீத்திக் கொண்டு தன் வீட்டை நோக்கி ஓடத் தொடங்கியது. ஆனால் முயல் வீட்டை தொட்டுவிட்டு வருவதற்குள் ஆமை முட்டைகோஸை தின்று விட்டிருந்தது. ஏன் என்று சண்டையிட்டதற்கு என் முதுகு ஓடு தான் எனக்கு வீடு என கூறி நடந்து சென்றது ஆமை. முயல் ஏமாந்து போனது.

M.துர்காதேவி
II

# வாண்டுகளின் கைவண்ணம்


பூமாதேவி IV


ரா.ரிஸ்வான் III


பாண்டிசெல்வம் III


சு.மகாலெட்சுமி II


ராம்குமார் IV


யசோதா II

# கவிதை தோரணம்

(படைப்பரங்க வகுப்பில் குழந்தைகள் தயாரித்தவை)

சின்ன சின்ன தூறல்
செல்ல செல்ல தூறல்
ஆசை ஆசையாய் தூறும்
தூறல்
மழையே மழையே போ
சிறு மழையாய் பெய்து போ
வாடி வதங்கும் நாங்கள்
மகிழ வந்து போ.

*தூறல் குழு*

*மதுரை சீடு இது மதுரை சீடு*
*குழந்தைகள் வாழ்விற்காக இயங்கும் மதுரை சீடு*
*வாழ்க வாழ்க தோழிகளே தோழர்களே*
*நாம் என்றால் சேர்ந்து சீடுக்கு சென்றிடுவோம்*
*நாம் படித்ததை நெஞ்சில் நிறுத்திடுவோம்*
*உலகம் புகழ வாழ்ந்திடுவோம்.*

*ரோஜா குழு*

மழை மழை வந்தாச்சு
சந்தோசம் தர வந்தாச்சு
வயலெல்லாம் செழிக்க வைக்கும்
வீடெல்லாம் நிரம்ப வைக்கும்
மழை மழை வந்தாச்சு
சந்தோசம் தர வந்தாச்சு.

*தாமரை குழு*

ஏ வாங்கடா வாங்க சீடுக்கு தான் மதுரை சீடுக்குத் தான்
ஆடி, பாடி, ஓடி விளையாட நேரம் வந்தாச்சு
அறிவுதனை வளர்த்துக் கொள்ள காலம் வந்தாச்சு
விதவிதமான படங்களையும் பார்த்து விட்டாச்சு
போட்டியில் ஜெயிச்சவுடன் பரிசு வந்தாச்சு
அன்புகளை தந்திட உறவு வந்தாச்சு
ஏ வாங்கடா வாங்க.
மதுரை சீடுக்கு.

*6ஆம் வகுப்பு குழந்தைகள்*



தேன் போன்ற கவிதை
புது மொழி பேசும்
ஓ புது மொழி பேசும்
கருத்தில் ஊன்றிய கவிதை
கண்ணை கவரும்
ஓ கண்ணை கவரும்
சுவாசம் வீசும் காற்று
மலரை ஆட்டுது
ஓ மலரை ஆட்டுது
மலர் தரும் சுவாசம்
சுவாசமாகுது - ஓ
சுவாசமாகுது.
இயற்கை கண்ணை பறிக்குது
ஓ கண்ணை பறிக்குது
செல்லமா வந்த மழை
என்னை நனைத்தது
ஓ சட்டென்று என்னை நனைத்தது

S.ஷர்மிளா VIII

**சின்னஞ்சிறு பிள்ளைகளே**
**ஓடி வாங்க**
**சிறு கதைகள் படிக்க**
**ஓடி வாங்க**
**சீடுக்கு ஓடி வாங்க**
**சுறுசுறுப்பாய் ஓடி வாங்க**
**விறுவிறுப்பான கதை படிக்க வாங்க**
**துள்ளி துள்ளி சிறகடித்து மகிழ்ந்திருக்க**
**சீடுக்கு வாங்க.**

*7ஆம் வகுப்பு குழந்தைகள்*

**சீடு குழந்தைகளே ஓடி வாங்க**
**ஆடி பாட ஓடி வாங்க**
**நாங்க பயிலும் இடத்துக்கு ஓடி வாங்க**
**உற்சாகமாய் இருக்க ஓடி வாங்க**
**ஆனந்தமாய் படித்திட ஓடி வாங்க**
**எங்க சீடுக்கு மதுரை சீடுக்கு.**

*8ஆம் வகுப்பு குழந்தைகள்*

# கதை... விடுகதைகள்..

1. தண்ணீர் இல்லாத குளம், தாமரை பூக்கும் குளம். அது என்ன?
2. வெடி வெடித்தும் விழுந்து நொறுங்காத கோட்டை : அது என்ன?
3. ஏழு பேர் நண்பர்கள் தனித்தனியே போவார்கள், தனித்தனியே வருவார்கள். அவர்கள் யார்?
4. சிவப்பு பைக்குள், சில்லறை கொட்டிக் கிடக்குது. அது என்ன?
5. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல். அது என்ன?
6. காலில்லாத பந்தலை காண காண விநோதம். அது என்ன?
7. தட்டைப் பந்தலில் பட்டை வைரங்கள்? அது என்ன?
8. ஆயிரம் பேர் அணிவகுத்தாலும் அதிராது தரை? அவை என்ன?
9. கையுண்டு விரலில்லை. கழுத்துண்டு தலையில்லை. அது என்ன?
10. பாயை சுருட்ட முடியலை. பார்க்க, பார்க்க எண்ண முடியலை?
11. மூடிக்கொண்டு நானிருப்பேன், மூவிரண்டு குத்து விழுந்தால் முகம் காட்டி நான் சிரிப்பேன். அது என்ன?
12. விதையில் கிடைக்காத எண்ணெய், செக்கில் இழுக்காத எண்ணெய். அது என்ன?
13. காலால் உதைத்தால், காற்றால் உருளும். அது என்ன?
14. சிவப்பு ராஜாவைச் சுற்றி வெள்ளைச் சிப்பாய்கள் அது என்ன?
15. நடக்க முடியாது நகராமல் இருக்காது. அது என்ன?
16. பகலில் தங்கத்தட்டு, இரவில் வெள்ளித்தட்டு. அது என்ன?
17. பழுத்திருக்கும் பழம், யாரும் பறிக்க முடியாத பழம். அது என்ன?
18. கண்ணிற்கு தெரியாது. கைபட்டால் தெரியும். அது என்ன?
19. ஒண்ணெடுத்து உரிச்சாலும் கண்ணெரிச்சல் உண்டாகும். அது என்ன?
20. ஊரையே விழுங்கி ஏப்பம் விடும் அரக்கி. அது என்ன?
21. பூ கொட்ட கொட்ட அதை அள்ள முடியவில்லை. அது என்ன?
22. தட்டாமல், கொட்டாமல் மேளம் கேட்கும். அது என்ன?
23. துளித்துளியாய் கண்ணீர்விட்டு இருளை விரட்டும். அது என்ன?

**விடைகள் :**


| | | | |
|---|---|---|---|
| 1. வானம், சூரியன் | 7. நட்சத்திரங்கள் | 13. மிதிவண்டி | 19. வெங்காயம் |
| 2. இடி இடிக்கும் வானம் | 8. எறும்புகள் | 14. நாக்கு | 20. கடல் |
| 3. கிழமைகள் | 9. சட்டை | 15. கடிகாரம் | 21. மழை |
| 4. மிளகாய் | 10. வானம், நட்சத்திரம் | 16. சூரியன், சந்திரன் | 22. இடி |
| 5. கிளி | 11. அரிசி | 17. நிலா | 23. மெழுகுவர்த்தி |
| 6. வானம் | 12. மண்ணெண்ணெய் | 18. மின்சாரம் | |


தினேஷ் I. ஸ்ரீநாத் V. சிவமணிகண்ணன் VII. வசந்தி VIII. தரணி VII

# வேர்கள் தீட்டியவை



சஞ்சய்குமார்
5ஆம் வகுப்பு





B.கௌசல்யா V




M.மகாராஜா
VII



R.காயத்ரி
VI



D.விக்னேஷ்
VI



C.சந்தோஷ்குமார்
VI



V.ஜென்சிராணி
VIII



C.சாங்கீதா
VII

# இப்போது பயமே இல்லை

நான் சீடுக்கு வருவதற்கு முன்னால் சேட்டை செய்து கொண்டு சாயங்காலம் எல்லாம் ஊர் சுற்றிக் கொண்டிருந்தேன். பள்ளியில் 20, 22 ரேங்க் எடுத்துக் கொண்டிருந்தேன். சீடுக்கு வந்த பிறகு பள்ளியில் நல்ல மாணவன் என்ற பெயரும், அருமையாக படிக்கிறான் என்றும் சொல்கிறார்கள். 1 முதல் 5 ரேங்க் வரைக்கும் எடுக்கிறேன். எனக்கு முதலில் டான்ஸ் ஆட வராது. சீடுக்கு வந்த பிறகு எல்லோரும் ஏதாவது நாட்டுப்புறக்கலை கற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறினார்கள். தப்பாட்டம், தேவராட்டம் எல்லாம் கற்றுத் தந்தார்கள். பாடத் தெரியாத பழக்கமில்லாத எனக்கு பாடக் கற்றுக் கொடுத்தார்கள்.

நாலு பேருக்கு முன்னால் தைரியமாக எழுந்து பேசுவதற்கு பயமாக இருக்கும். இப்போது பயமே இல்லை. சீடு விழாக்களில் பேசுவேன். வெளிநாட்டினரிடமெல்லாம் பேசினேன். இந்த வாய்ப்புகளை எல்லாம் எனக்கு வழங்கிய மதுரை சீடுக்கு நன்றி.

P.யோகராஜ்
IX

## கட்டத்தை நிரப்பு

நாடுகளே இல்லாத கண்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | | | ர் | | கா |

மனித உடலில் அதிகமாக காணப்படும் தாது

| | | | | |
|---|---|---|---|---|
| கா | | சி | | ம் |

மிக உயர்ந்த ரத்த அழுத்தம் கொண்ட விலங்கு

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஒ | | | க | | | | கி |

கட்டபொம்மனிடம் வரி கேட்ட ஆங்கிலேயன்

| | | | |
|---|---|---|---|
| ஜா | | | ன் |

பாரதியார் பிறந்த ஊர்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| எ | | டை | | பு | | ம் |

முத்தமிழ் காப்பியம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சி | | ப் | | | கா | | ம் |

மாணிக்கராஜ்
X

## வர வேண்டிய எண் எது

| | | | |
|---|---|---|---|
| 7 | 9 | 4 | 64 |
| 8 | 5 | 5 | 65 |
| 2 | 4 | 11 | 66 |
| 5 | 6 | 2 | ? |

கேள்வி குறியிட்ட இடத்தில் வரவேண்டிய எண் எது?

சுமதி
X

## சைனீஸ் செக்கர்ஸ்

இரண்டிலிருந்து ஆறு பேர் வரை விளையாடக் கூடிய விளையாட்டு இது. சைனீஸ் செக்கர்ஸ் என்று பெயர் இருந்தாலும் இது ஜெர்மனியில் 1893-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட விளையாட்டு ஆரம்பத்தில் இதன் பெயர் "ஸ்டெர்ன்ஹல்மா". சீனர்கள் பகுதிக்கு இந்த விளையாட்டு சென்ற போதுதான் இதன் பெயர் சைனீஸ் செக்கர்ஸ் என்றானது.நட்சத்திர வடிவிலான இந்த போர்டில் காய்களை நடுவே காலியாக உள்ள இடத்தில் நகர்த்தி விளையாடி எதிர்முனையை முதலில் அடைகிறவருக்கு வெற்றி.

V.திவ்யபாரதி
XI


அண்டார்டிகா
கால்சியம்
ஒட்டகச்சிவிங்கி
ஜாக்சன்
எட்டையபுரம்
சிலப்பதிகாரம்

விடை : 22
(7+9) × 4 = 64
(8+5) × 5 = 65
(2+4) × 11 = 66
(5+6) × 2 = 22

# கனவுகளின் கண்கவர் காட்சிகள்




P.மணிகண்டன்
VIII



K.Sathya, IX-B




M.சத்யபாமா
IX



J.அந்தோணிபிரதீப்
XII



A.சுமதி
IX



B.பிரபு
XII



M.பிரதீப்ராஜா
XI

# அழகான வால்ஹேங்கர்



வெவ்வேறு விதமான விலங்குகளின் படங்களை செய்தித்தாள், பத்திரிகை, பழைய புத்தகங்கள் ஆகியவற்றில் இருந்து வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள்.

அவற்றை சற்று தடிமனான அட்டைகளில் ஒட்டுங்கள்.

அல்லது இங்கே கொடுக்கப்பட்ட படங்களை மாதிரியாக வைத்து அட்டைகளில் நீங்களே ஒட்டிக் கொள்ளுங்கள்.



பஞ்சிங் மெஷினை வைத்து அட்டைகளின் மேல்பகுதியில் ஓட்டை போட்டுக் கொள்ளுங்கள்.

வெவ்வேறு நிறத்தில் சற்று தடிமனான நூலை எடுத்து அதன் ஒரு முனையை ஓட்டைகளின்வழி நுழைத்து ஒரு அட்டையைக் கட்டிக் கொள்ளுங்கள்.

ஹேங்கர் ஒன்றை எடுத்து கயிற்றின் இன்னொரு முனையை அதில் கட்டி விடுங்கள். இப்படி எல்லா அட்டைகளையும் கட்டி முடித்து கூரையில் கட்டித் தொங்க விடுங்கள் (சுவரிலும் ஆணி அடித்து தொங்க விடலாம்).


நீங்களே செய்த அழகான வால் ஹேங்கர் ரெடி!

# எலும்புக் கூடு

ஒரு தடிமனான அட்டையை 25 செ.மீ. விட்டமுள்ள வட்டமாக வெட்டிக் கொள்ளுங்கள். அதன்இரு பக்கமும் வெள்ளை நிற காகிதத்தை ஒட்டுங்கள். அதன் பின்னே துணி மடித்து வைக்கும் ஹேங்கர் ஒன்றை செல்லோ டேப் போட்டு ஒட்டுங்கள். அதில் இன்னொரு ஹேங்கரை மாட்டுங்கள். ஹேங்கர் நகராமல் இருக்க அதிலும் சல்லோஃபன் டேப் ஒட்டுங்கள். பின்னர் மூன்றாவது ஹேங்கரையும் அதே போல் ஒட்டுங்கள். இப்போது எலும்புக்கூடின் உடலும், முகமும் உருவாகி விட்டது.

ஒரு வயரை எடுத்து இரண்டாக மடியுங்கள். அதன்ஒரு முனையை முதல் ஹேங்கரின் ஒரு முனை வழி உள்ளே விடுங்கள். இரண்டு முனையும் சமமான தூரத்தில் இருக்கும்படி செய்யுங்கள். சிவப்பு நிற பாலீதீன் கவரில் க்ளவுஸ் போல் வெட்டி எடுத்து வயரை அத்தோடு சேர்த்து (படத்தில் காட்டியுள்ளது போல) கட்டுங்கள். எலும்புக்கூட்டின் கை ரெடி. இப்படி ஹேங்கரின் மற்றொரு முனையில் இன்னொரு வயரைக் கட்டி அடுத்த கையை உருவாக்குங்கள். அதே போல் இன்னும் இரண்டு வயர்களை எடுத்து மூன்றாவது ஹேங்கரில் நுழைத்து கால்களை உருவாக்குங்கள். கால்களில் பாலிதீன் கவருக்கு பதில் பழைய சாக்ஸைக் கட்டி விடுங்கள்.

இப்போது எலும்புக்கூடின் தலையில் உங்கள் இஷ்டம் போல (பயங்கரமான) முகத்தை வரையுங்கள். மொத்த எலும்புக்கூடிலும் ஆங்காங்கே ஃப்ளோரஸண்ட் கலர் பெயிண்டைத் தீட்டுங்கள். எலும்புக்கூடு ரெடி! அதன் தலைப்பகுதியை பிடித்து ஆட்டினால் எலும்புக்கூடு மொத்தமாக ஆடுவது போல பயமாக இருக்கும்.



நன்றி-சுட்டிவிகடன்

# தெரிந்து கொள்வோம்

## நாய்



- மனிதர்களை விட பத்து மடங்கு கேட்கும் சக்தியும், மோப்ப சக்தியும் நாய்களுக்கு உண்டு.
- நாய்களின் ஆயுட்காலம் 15 ஆண்டுகள்.
- தமக்குக் காவல் தெய்வமாக நாயை கிரேக்கர்கள் கருதுகின்றனர்.
- நாய்க்கு இதயத்துடிப்பு ஒரே சீராக இருக்காது. 70 முதல் 120 வரை மாறுபடும்.
- ஜெர்மனியின் டாபர்மேன் நாய் தான் உலகப் புகழ் பெற்றது.
- நாயின் நாக்கு நீளமானது. அதைக் கொண்டே தன் உடலை தூய்மையாக வைத்துக் கொள்கிறது.

## எறும்பு



- எறும்புகளின் குடும்பத்தில் ஆண் எறும்பு, ராணி எறும்பு, பணி எறும்பு ஆகிய மூன்று வகைகள் உள்ளன.
- இதில் ராணி எறும்பு சிறகுடையது.
- பணி எறும்புகள் 7 ஆண்டு காலம் வாழும். ராணி எறும்பு 15 ஆண்டுகள் வாழும்.
- ஆண் எறும்புகளின் ஆயுள் மிகக் குறுகியது.
- ராணி எறும்புகள் கூட்டை அமைப்பதுடன், தொடர்ந்து முட்டையிடும்.

## முயல்




- முயலின் பற்கள் வளர்ந்து கொண்டே இருக்கும்.
- மணிக்கு 35 மைல் வேகத்தில் ஓடும்.
- இவற்றின் கண்களுக்கு இமைகள் கிடையாது.
- பருவநிலைக்கேற்ப முயலின் உடல் நிறம் மாறும்.
- முயல் 2.5 மீட்டர் தூரம் தாண்டும்.
- முயலுக்கு மிகவும் பிடித்தமான உணவு கேரட்.

## ஒட்டகச்சிவிங்கி



- ஒட்டகச்சிவிங்கியின் ஆங்கிலப் பெயர் ஜிராஃப்.
- அரேபிய வார்த்தையான ஜிராஃபாவில் இருந்து வந்தது இந்த வார்த்தை. நீண்ட கழுத்து என்பதே இதன் அர்த்தம்.

## யானை



- யானையின் துதிக்கையில் எலும்பு இல்லை.
- கிட்டப்பார்வை உடையது யானை.
- இந்தியப் பெண் யானைக்கு தந்தம் கிடையாது.
- ஆப்ரிக்க பெண் யானைக்கு தந்தம் உண்டு.
- பொதுவாக பெண் யானைகளுக்கு மதம் பிடிப்பதில்லை.
- யானைகளுக்கான மருத்துவமனை கேரள மாநிலம் திருச்சூரில் உள்ளது.

# ப்ளீஸ் சிரிக்காதீங்க!



சார் : டேய்! மூணையும், மூணையும் சேர்த்தா எத்தனை வரும்டா?
மாணவன் : ஆறு வரும் சார்
சார் : அப்போ ஆறையும், ஆறையும் சேர்த்தா?
மாணவன் : வெள்ளம் வரும் சார்.

அப்பா : டேய்! ஏண்டா நியூஸ் பேப்பரை தண்ணியில போடுற?
மகன் : பேப்பரில் சுடசுட செய்தி என்று போட்டிருக்குதே.

ரகு : உங்க கூந்தல் இவ்வளவு அழகா, கருப்பா, நீளமாக இருக்கே எப்படி?
ரமா : காலையில ஷாம்பு, மதியம் சீயக்கா போடுவேன்.
ரகு : அப்ப, நைட்டுக்கு?
ரமா : கழட்டி ஆணியில போடுவேன்.

ராமு : ஏண்டா, நீ சைக்கிள் உயரம் கூட இல்லை. நீயெல்லாம் சைக்கிள் ஓட்டறே.
தாமு : ரயில் ஓட்டறவர் என்ன ரயில் நீளமாவா இருக்காரு?

ராஜா : அருவிக்கும், குருவிக்கும் என்ன வித்தியாசம்?
தேஜா : தெரியலியே!
ராஜா : "மேலே இருந்து கீழே விழுந்தா அருவி, கீழே இருந்து மேலே பறந்தா குருவி"

ராமசாமி : என் பையன் பண்ணின காரியத்தால என்னால வெளிய தல காட்ட முடியலை.
ரங்கசாமி : அப்படி என்ன பண்ணிட்டான்?
ராமசாமி: என் 'விக்'கை எங்கேயோ ஒளிச்சு வச்சுட்டான்.

ஆசிரியர் : பாருங்கடா நம்ம ரவி, பாடம் நடத்துறதுக்கு முன்னாடி எவ்வளவு பயபக்தியா சாமி கும்பிடுறான்
ரவி : எங்க அம்மா தூங்குறதுக்கு முன்னாடி சாமி கும்பிடனும்னு சொல்லியிருக்காங்க சார்.

ராமசாமி : நான் கோபம் வந்தா மட்டும் கண்ணாடி போட்டுக்குவேன்
ரங்கசாமி : ஏன்?
ராமசாமி : கோபம் கண்ணை மறைக்குமே.

ஆசிரியர் : உங்க பையனோட நடவடிக்கையும், அவன் பரீட்சை பேப்பரும் ஒரே மாதிரிதான் இருக்கு
அப்பா : எப்படிங்க?
ஆசிரியர் : யாராலும் திருத்த முடியாது.

சிரிப்(பு) பூக்கள் கட்டியவர்கள்
A.ஜேம்ஸ், M.கோபால், R.சீனியம்மாள் VII Std.
M.சூர்யா, D.சுரேஷ்கண்ணன், S.செண்பகமுத்துமுனியாண்டி VII Std.

# ஒரு குடம் தண்ணி ஊத்தி...

சிறுமியர் ஆடக் கூடிய ஆட்டங்களில் ஒன்று இந்த விளையாட்டு. நான்குக்கும் அதிகமான சிறுமியர் விளையாடும் ஆட்டமாகும். கூட்டத்தில் உயரமான இரண்டு சிறுமிகள் எதிரெதிராக நின்று, கைகளை இருவரும் கோத்தபடி உயர்த்தி, நுழைவாயில் போல அமைத்து நிற்க வேண்டும். மற்ற சிறுமிகள் ஒருவர் பின் ஒருவராக நுழைவாயிலுக்குள் நுழைந்து வெளியே வேண்டும். அப்போது....



ஒரு குடம் தண்ணி ஊத்தி ஒரு பூ பூத்ததாம்
ரெண்டு குடம் தண்ணி ஊத்தி ரெண்டு பூ பூத்ததாம்
மூணு குடம் தண்ணி ஊத்தி மூணு பூ பூத்ததாம்...

என்று பத்து வரை பாடிய படி, வாசல் போல நிற்கும் இரு சிறுமிகளுக்கு இடையே புகுந்து வெளியேறுவர்.

பத்து குடம் தண்ணி ஊத்தி பத்து பூ பூத்ததாம் என்று கூறி முடித்த அடுத்த நொடியில், நுழைவாயிலில் உள்ளே நுழைந்த சிறுமியை, நின்றிருக்கும் இருவரும் கைகளைக் கோத்தபடியே கீழே தாழ்த்தி, சிறுமியை சிறைப்படுத்துவது போல் பிடித்துக் கொள்வர்.

இப்போது வெளியில் இருக்கும் சிறுமிகளில் ஒருத்தி சிறைபிடித்திருப்பவர்களை நோக்கி, கணுக்காலைத் தொட்டு, "இதோட பொன்னு தரன் உடுடா துலுக்கா என்று கூறுவாள். சிறை பிடித்திருக்கும் இருவரும், 'உடமாட்டேன் மலுக்கா' என்று கூறுவர். பின்பு முழங்காலளவு காண்பித்து, 'இதோட பொன்னு தரேன் உடுடா துலுக்கா' எனக் கூற, 'உடமாட்டேன் மலுக்கா' என மீண்டும் கூறுவர்.

மீட்க வந்த சிறுமி, மீண்டும் மீண்டும் அளவை உயர்த்தி, இடுப்பளவு, மார்பளவு, கழுத்தளவு, தலையளவு எனக் காண்பித்து 'இதோட பொன்னு தரேன் உடுடா துலுக்கா' என் கேட்க, சிறை பிடித்தவர்களும், 'உடமாட்டேன் மலுக்கா' என்றே மீண்டும் மீண்டும் கூறுவர்.

கடைசியாக, சிறை பிடித்தவர்கள், தங்களிடம் சிக்கிய சிறுமியைப் பார்த்து, 'உன் புருஷன் பேரு என்ன? என்று' கேட்க, அவள் ஏதேனும் ஒரு பெயரை கூற, அதன் பிறகே அவளை விடுவிப்பர். அதன் பிறகு அவள் ஆட்டத்திலிருந்து வெளியேற, மற்றவர்கள் மீண்டும் பத்து வரை பாடியபடி உள்ளே நுழைந்து வெளியேற, ஆட்டம் தொடரும். இவ்வாறு ஒவ்வொருவராகச் சிறைபிடிக்கப்பட்டு அனைவரும் சிறையான பின் ஆட்டம் முடியும்.

இந்த விளையாட்டில், உள்ளே நுழைந்து வெளியேறும் சிறுமிகள், தாம் சிறைப்பட்டு விடக்கூடாது என்ற எண்ணத்தில் விரைந்து வெளியேறுவர். ஒரு சில நேரங்களில் ஒருவர்கூடச் சிறைப்படாமல் தப்பி விடுவதுண்டு. நிற்பவர்களும் மிகுந்த கவனத்தோடு பத்து எண்ணிக்கை முடிவதற்காகக் காத்திருந்து லபக்கென்று பிடித்து விடுவர்.

ஒருவருக்கொருவர் எச்சரிக்கையாகவும், விழிப்பாகவும் இருந்து விளையாடுவதுதான் இந்த ஆட்டத்தின் சிறப்பாகும். பிற விளையாட்டுகளைப் போல, சில சிறப்புப் பண்புகளை சிறுமிகளிடையே ஏற்படுத்துகிறது. ஒன்று முதல் பத்து வரை எண்ணும் பயிற்சியையும் நினைவாற்றலையும் வளர்ப்பதாகப் பாடல் அமைந்துள்ளது.

பாடலுக்குப் பின் சிறுமி சிறைப்படுவதும், அவளை மீட்க முயற்சிப்பதும், வரலாற்று நிகழ்வுகளோடு தொடர்புடையவையாக நாட்டுப்புறவியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

மீட்பதற்காகக் கூறும் சொற்களை நாம் கவனித்தால், ஆய்வாளர்களின் கூற்றிலுள்ள உண்மை வெளிப்படும். இதோட பொன்னு தரேன் உடுடா துலுக்கா எனக் கூறுகின்றனர். இங்கே பொன்னு என்ற சொல் பொன்னைக் குறிக்கிறது. துலுக்கா என்பது விளி வேற்றுமையில் அமைந்துள்ளது. துலுக்கன் என்றால் துருக்கி நாட்டான் அல்லது முகமதியன் என்பது பொருள்.

ஆட்டத்தில் பெண்ணைச் சிறைப்பிடித்திருப்பவனை முகமதியனாகப் பாவித்து ஆடுகின்றனர்.

மொகலாய மன்னர்கள் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தபோது, அவர்கள் கைப்பற்றிய பகுதியின் மன்னனையும், அவன் மனைவியையும் சிறை பிடித்திருப்பர். அதனைத் தொடர்ந்து குடிமக்களையும் குறிப்பாகப் பெண்களையும் சிறை பிடித்திருப்பர். அவர்களிடமிருந்து மீட்பதற்காக, பொன், பொருள், வீடு ஆகியவற்றைக் கொடுத்திருக்கலாம். இதுபோன்ற வரலாற்று நிகழ்வுகளை வாய்மொழிப் பாடல்கள், மரபு வழி விளையாட்டுகளின் வாயிலாக எதிர்கால சந்ததிக்குத் தெரிவிப்பது வழக்கம்.

மொகாலயர் படையெடுப்பின் போது நடைபெற்ற நிகழ்வுகள்தான் இந்த விளையாட்டில் வெளிப்படுவதாகவும், அதற்கு உளவியல் பாதுகாப்பு நடத்தை காரணமாக இருக்கலாம் என்றும் முனைவர் சா.வளவன் குறிப்பிடுகிறார்.

நம்மை எதிரிகள் சிறைப்படுத்த முயன்றால், நாம் அவர்களிடமிருந்து எச்சரிக்கையாகத் தப்ப வேண்டும் என்ற உணர்வை சிறுவர்களிடையே ஏற்படுத்தும் நன்மையை இந்த விளையாட்டின் மூலம் நாம் அறியலாம்.

விளையாட்டின் இறுதியில், உன் கணவர் பெயர் என்ன? எனக் கேட்டு, பெயரை கூறியதும் விட்டுவிடுகின்றனர். இதன் மூலம் திருமணமான பெண்களைத் தவறி சிறை பிடித்தால், அவள் மணமானவள் என்ற தெரிந்ததும் விட்டு விடுகின்றனர். இது எதிரியின் பண்பாட்டை மதிக்கும் பாங்கை வெளிப்படுத்துகிறது.

நன்றி: கிராமப்புற விளையாட்டுக்கள் - இரத்தின. புகழேந்தி
விகடன் வெளியீடு.

# பாராட்டுகின்றோம்




## M.தங்கலெட்சுமி

D/o.முருகேசன். M.சுந்தரி. கிழக்குத்தெரு. கரும்பாலை. மதுரை-20.

சீடு 10 ஆண்டு கால வரலாற்றில் முதன்முறையாய் பெண் குழந்தைகளில் சிறப்பான மதிப்பெண்கள் பெற்ற தங்கலெட்சுமி அவர்களை புதுயுகம் இதழ் மகிழ்வுடன் பாராட்டுகின்றது. இவர் பெற்ற மதிப்பெண் 1036/1200. இவர் ஆரம்பக்கல்வியை பட்டுப்பூச்சி பள்ளியிலும். உயர்நிலைக் கல்வியை செங்குந்தர் பள்ளியிலும். மேல்நிலை கல்வியை மீனாட்சி சுந்தரேஸ்வரர் பள்ளியிலும் பயின்றார்.

சீடு-ன் புகழ்மிக்க நாடகமான அறுந்தவால் நாடகத்தில் அறுந்தவால் அரசனாக நடித்து ஏராளமானோர் மனங்களில் இடம்பெற்றவர். ஏழு ஆண்டு கால சீடு உறுப்பினர். மிகச்சிறந்த ஆளுமையாக திகழும் தங்கலெட்சுமி கல்வியில் உயரிய சிகரங்கள் தொட எமது வாழ்த்துக்கள். வாழ்க வளமைகள் பெறுக.



## P.சரவணக்குமார்

S/o.P.பாண்டியராஜன். P.நாகரத்தினம். 343. நடுத்தெரு. கரும்பாலை. மதுரை-20.

சீடு 10 ஆண்டுகால வரலாற்றில் முதன்முறையாக உயிர்கணித பிரிவில் சிறப்பான மதிப்பெண்கள்பெற்ற சரவணக்குமார் நம் சீடு உறுப்பினராக இருப்பது அளவிடற்கரிய மகிழ்ச்சியாகும். அவரை பெருமையுடன் பாராட்டுகின்றோம்.

சரவணக்குமாரின் குடும்பம் செங்குந்தர் பள்ளி பத்தாம் வகுப்பு பரிசுகளை மூன்று முறை வென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

அக்கா சரண்யா - 435 (பள்ளி மூன்றாம் பரிசு) 2005
சரவணக்குமார் - 410 (பள்ளி முதல் பரிசு) 2007
தம்பி திலீப்குமார் - 460 (பள்ளி முதல் பரிசு) 2009

(தம்பி திலீப்குமார் கணிதபாடத்தில் 100/100 பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது). சீடு நாடகங்களில் பங்கேற்றதை சரவணக்குமார் பெருமையுடன் நினைவு கூறுகிறார். கிரிக்கெட் ஆர்வலரான சரவணக்குமாரின் கனவு சிவில் இன்ஜினியராவது அவரது கனவு நிஜமாக வாழ்வில் சிறப்புற வாழ்த்துகின்றோம். வாழ்க. வளமைகள் பெறுக.



## P.மகேஸ்வரி

D/o.K.பஞ்சநாதன். P.மகுடீஸ்வரி. நடுத்தெரு. கரும்பாலை. மதுரை-20.

1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை கரும்பாலை மாநகராட்சி பள்ளியிலும். 6 முதல் 8ஆம் வகுப்பு வரை செங்குந்தர் பள்ளியிலும். 9ஆம் வகுப்பு கோவையிலும். ஒரு வருட இடைநிற்றலுக்குப் பிறகு 10ஆம் வகுப்பு காக்கைபாடினியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயின்ற நம் சகோதரி மகேஸ்வரி அரசுப் பொதுத்தேர்வில் பெற்ற மதிப்பெண் 475/500. வறுமையிலும் செம்மையுற முடியும். சிறப்பு பெற முடியும் என்பதற்கு விடிவெள்ளி மகேஸ்வரி எடுத்துக்காட்டு. அமைதியே உருவமான மகேஸ்வரி எடுத்திருக்கும் மதிப்பெண் கடந்த 20 வருடங்களில் கரும்பாலையில் உள்ள பெண் குழந்தைகள் கண்டிராத மதிப்பெண். பெண் குழந்தைகள் பெருமையுடன் சாதிக்கும் காலம் இக்காலம். நாம் பெருமையுடனும். பேருவகையுடனும் மகேஸ்வரியை வாழ்த்துகின்றோம். இவரின் கனவு மருத்துவராவது. கனவு மெய்ப்பட இறைவனை பிரார்த்திக்கிறோம். வெல்க இவரது நம்பிக்கை. வாழ்க. வளமைகள் பெறுக.

- A.S.கார்த்திக்பாரதி

# வசந்தமுகாம் 2009

### New lights given by Vasantha Mugam 2009

Yes! In this hot summer, those 6 pleasant days mostly loved by the children has come. MADURAI SEED's Yearly summer camp was held on between mornings 9.30 to evening 7'o clock on 15.5.09 to 20.5.09. 72 children and 10 youth participated in this camp.

The daily activities of the Vasantha mugam, were planned on the basis of some thoughts like introduction of world cinema, making of new approach in interest, bringing up the team spirit among all, creating healthy competition among the children and exhibiting their inner soul's effort, explaining the community life through the cultural programme activities, providing practices to show out their leadership quality.

Every day morning, at the beginning of the camp song practice is given by volunteer Murugapandi and 6 songs composed by him were taught. Children were also motivated to compose songs. The children composed 5 songs themselves and stage those songs.

### Cinema projection and group discussion



After projecting 6 films where is my friend's home? (Iranian film), Salaam Bombay (U.K.), Life is beautiful (Italy), The way home (Korea), Children of Heaven (Iran) and Le Peuple Migrator (French) about the birds migration, group discussions were held on excellent suggestions were been upcoming from the kids.

In the group discussion, many excellent feed backs have come like street kids life, the childhood friendship of the school students, the state of the children, who are in battle field circumstances, kids in the city background who are longing for the grandma, grandma's concern and care, the love and affection among the poor children in spite of their poverty, presenting gifts to each other.

### Games/Competitions

In this camp, there were more than 16 games conducted on Karumbalai was been simply shaking during our "Treasure Hunt" event which was a part of our fifth day activities. Story narration about the usage of fruits and so on.

### Special guests came to the camp

Society well wisher Balachandran, Rajendran from Snegam Trust, Religious Person Palchami, and Indian express reporter Sunitha have visited our camp and enjoyed our activities.

### Camp Valuation:

To revalue the children's activities during 6 days The American College, second year social work students namely Lawrence, Surya, Deepa, Sathya, Grace, Sekar, Justin,



Vellaichamy, Jeans Joseph, Anish gave their presence and selected the best team and gave their enthusiasm to the kids.

### Hand craft classes



Hand works classes like card making, art from waste, vegetable carving, Kite making, making greeting cards took place in the camp and the children were doing them actively by working as separate and specific teams. Children have done all very creatively and exhibited them in the name of their team like Kuthugalam, Kummalam, Urchagam, Kondattam, Aravaram and Anantham.

### Cultural Evening

Team by team, all kids gave their cultural events under the topics like Individual Skills, Folk, Comedy, Re-mix and Western.

### Responsibilities

Camp Children and youth have done their works like cleaning, drinking water, program comparing, distributing snacks, the specialty of the day and day reports.

### Every day a fruit

In this Vasantha mugam every day fruits like mango, cucumber, Jack fruit and lemon were provided to children. Tea and snacks were also given for 2 times a day.

### Prizes



On the Final day, Gifts and certificates are provided to all the participants of this camp. Special gifts are provided to the best team and the first team which getting high score during this camp. The team under the leadership of volunteer Saranya got the prize for best team and the team under volunteer Thanga Lakshmi got the prize for first team.

### "Vasantham Camp" in Medias

2 daily morning newspaper namely The Hindu and The Indian Express and one evening newspaper, Media Times issued details about our Vasantham camp. Local T.V. Channel, Media News telecasted about our camp. These were all happening gave more spirit and enthusiasm to MADURAI SEED.

This fulfilled camp was guided by Snegam Trust Director, S.Muthukumar and MADURAI SEED's Managing Trustee A.S.Karthikbharathi and the camp was organised by the programme coordinator M.Mansur.

Year by year, this camp is transferred new and new things to the children. "Definitely this Vasantham Camp will bring out more different thing in upcoming day" this assurance, the camp was finished.

**C.Karpagajothi B.A.**

# மதுரை சீடு - ஏப்ரல் 2009 நடவடிக்கைகள்

1.4.09 கரும்பாலையில் தலித் குழந்தைகளும் பள்ளி இடைநிற்றலும் என்ற தலைப்பில் நிதி அறங்காவலர் அன்பரசன் தனது கள ஆய்வை தொடங்கினார்.

3.4.5.6.7.8 ஆம் வகுப்பினருக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் வாசித்தல், பேசுதல் திறனறித் தேர்வுகள் நடத்தப்பட்டன.

ஆண்டு இறுதியினையொட்டி தேன்கூடு, வருகைப் பதிவு, வருடாந்திரநடவடிக்கைகள் போன்றவற்றை இறுதி செய்யும் பணிகளில் தொண்டர்கள் ஈடுபட்டனர்.

2.4.09 3.4.5.6.7.8. ஆம் வகுப்பினருக்கு கணிதம், அறிவியல், சமூக அறிவியல் திறனறித்தேர்வுகள் நடைபெற்றன.

3.4.09 10ஆம் வகுப்பு கணித அரசுப் பொதுத் தேர்வு நடைபெற்றது.

12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதி முடித்த மாணவர்கள் தினமலர் நாளிதழ் நடத்திய "வழிகாட்டி" நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

3.4.5.6.7.8 ஆம் வகுப்பினருக்கு திறனறித் தேர்வுகள் நடைபெற்றன.

6.4.09 ஆமத்தூர் கிராம திருவிழாவினை கார்த்திக் அண்ணன் தலைமையில் தேடல் அரங்க இளைஞர்கள் மோகன், அருண்குமார், P.மணி போன்றோர் பங்கேற்றனர்.

7.4.09 மும்பையிலிருந்து சோனைமுத்து தேனியிலிருந்து டாக்டர். தாரா சீடு கல்வி மையங்கள பார்வையிட்டு குழந்தைகள், இளைஞர்களை சந்தித்து உரையாடினர்.

10ஆம் வகுப்பு அறிவியல் அரசுப் பொதுத்தேர்வு நடைபெற்றது.

8.4.09 தொண்டர்கள் புதுயுகம், புதிய வெளிச்சங்கள், சிற்றிதழ்கள் தயாரிப்பு வேலைகளில் ஈடுபடடனர்.

நிறைவாக இன்று 10ஆம் வகுப்பு சமூக அறிவியல் அரசுப் பொதுத்தேர்வு நடைபெற்றது.

9.4.09 தொண்டர்கள் புதுயுகம், புதிய வெளிச்சங்கள், சிற்றிதழ்கள் தயாரிப்பு வேலைகளில் ஈடுபட்டனர்.

சுவிட்சர்லாந்து ஆக்ஸ்போர்டு பப்ளிசர்ஸ் தங்களது **News Letter**ல் மதுரைசீடு பற்றி **"Sharing Classes with India - Madurai Seed"** என்ற தலைப்பில் செய்தி வெளியிட்டிருந்னர்.

9ஆம் வகுப்பு முதல் 6ஆம் வகுப்பு வரை உள்ள குழந்தைகளுக்கு ஆண்டுத் தேர்வுகள் தொடங்கின.

13.4.09 தாரணி அவர்களுடன் **SKYPE** மூலம் இளைஞர்கள் கலந்துரையாடினர். தொண்டர்கள் 10ஆம், 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கில பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

14.4.09 அமெரிக்கன் கல்லூரி சமூகப் பணித்துறை மாணவர்கள் விக்னேஷ், கார்த்திக், பாலியல் கல்வி குறித்து சீடு மாணவர்களுடன் கலந்துரையாடினர்.

19.4.09 பாண்டியன் சரஸ்வதி பொறியியற் கல்லூரி மாணவர்கள் சுரேஷ் மேனன், சரவணக்குமார் மதுரை சீடு மையங்களை பார்வையிட்டன்.

மதுரை சீடு குழந்தைகள் கப்பலூரில் நடைபெற்ற **FCMRP** மாவட்ட கூடுகையில் கலந்து கொண்டனர் பொறுப்பு : சுல்தான் அலாவுதீன்

23.4.09 6 முதல் 9ஆம் வகுப்பு குழந்தைகளுக்கான ஆண்டுத் தேர்வுகள் முடிவடைந்து கோடை விடுமுறை தொடங்கியது.

24.4.09 அமெரிக்கன் கல்லூரி சமூக பணித்துறை பேராசிரியர். பாபு சார்லஸ் மற்றும் தொண்டர்கள் இணைந்து மதுரை சீடுக்கான புதிய முழக்கங்கள் குறித்த பணிகளில் ஈடுபட்டனர்.

25.4.09 கார்த்திக் பாரதி, அன்பரசன் சிடார் அமைப்பு நடத்திய கலந்துரயாடல் கூட்டத்தில் பங்கேற்றனர். மதுரை சீடு 11ஆம் ஆண்டுக்கான குழந்தைகள் பேரவை மற்றும் இளைஞர் பேரவை தேர்தல் நடைபெற்றது. குழந்தைகள் பேரவை தலைவர்களாக மாணிக்கராஜ், முத்துமாரி போன்றோரும் இளைஞர் பேரவை தலைவர்களாக சரண்யா மற்றும் முருகபாண்டி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தொண்டர் சுல்தான் அலாவுதீன் இல்ல விழாவில் மதுரை சீடு தொண்டர்கள் திரளாக பங்கேற்றனர்.

28.4.09 அனைத்து குழந்தைகள் மற்றும் தொண்டர்கள் இணைந்து சுற்றுச்சூழல் பூங்காவிற்கு சென்று வந்தனர். பங்கேற்ற குழந்தைகள்- 64.

30.4.09 காலை கார்த்திக் அண்ணன் மற்றும் மன்சூர் அண்ணன் செசி கிராமப்புற தொண்டர்களுடன் கலந்துரையாடினர். மாலை தொண்டர்கள் கூடுகை நடைபெற்றது.

K.அன்பரசன் M.A.

# மதுரை சீடு மே 2009 நடவடிக்கைகள்

1.5.09 இன்று மேதினம் குழந்தைகளுக்கு மே தின வரலாறு பற்றிகூறப்பட்டது.
சுவிஸ் நண்பர் தாரணி அவர்கள் SKYPE மூலம் ஆங்கில பயிற்சி வகுப்புகள் நடத்தினார்.

4.5.09 மற்றும் 5.5.09
7,8,9,10ஆம் வகுப்பு குழந்தைகளுக்கு தொண்டர். R.கார்த்திக்-இன் ஆங்கில பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

6.5.09 பெருங்குடி RTIயில் நடைபெற்ற FPCP மாவட்டக் கூட்டத்தில் இயக்குநர் மன்சூர் கலந்து கொண்டனர்.
CESCI குழந்தைகளுக்கான கோடை முகாம் நடத்துவது குறித்து CESCI தொண்டர்களுக்கு நிர்வாக அறங்காவலர் A.S.கார்த்திக்பாரதி வழிகாட்டுதல்கள் வழங்கினார்.
இன்று மீனாட்சி அம்மன் கோவில் தேரோட்டத்தில், மதுரை சீடு தொண்டர்கள் சேவையாற்றினர். புதிய வெளிச்சங்கள் சிற்றிதழை மக்களிடையே விநியோகித்தனர்.

7.5.09 மதுரை சீடு மூத்த தொண்டர் ஜான் பிரெஸ்னி அவர்களின் திருமண விழாவில் நிர்வாக அறங்காவலர் கார்த்திக் பாரதி மற்றும் தொண்டர்கள் கலந்துகொண்டனர்.

8.5.09 மதுரை சித்திரை திருவிழாவையொட்டி இன்று தல்லாகுளத்தில் கள்ளழகர் எதிர்சேவை நடைபெற்றது. மதுரை சீடு தண்ணீர் பந்தல் அமைத்து பொதுமக்களுக்கு சேவையாற்றியது நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. காணாமல் போனவர்களை கண்டுபிடித்து தரும் மையமாகவும் செயல்பட்டது. 20க்கும் மேற்பட்ட பெற்றோரிடம் குழந்தைகள் சேர்பிக்கப்பட்டனர்.

9.5.09 சித்திரை திருவிழாவையொட்டி கள்ளழகர் வைகையாற்றில் இறங்கும்வைபவம் நடைபெற்றது.
நிர்வாக அறங்காவலர் கார்த்திக்பாரதி செசி தொண்டர்களுக்கு குழந்தைகள் முகாம் நடத்துவது குறித்து பயிற்சி அளித்தார்.

11.5.09 சித்திரை திருவிழாவையொட்டி தல்லாகுளத்தில் பூப்பல்லக்கு உற்சவம் நடைபெற்றது. சீடு தொண்டர்கள் விழாவில் தன்னார்வத் தொண்டாற்றினர். ஏழை, எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

13.5.09 இன்று இந்திய மக்களவைத் தேர்தல் நடைபெற்றது. மதுரை சீடு-இல் பதினெட்டு வயது நிரம்பிய அனைவரும் ஆர்வத்துடன் சென்று தங்களின் ஜனநாயகக் கடமையாற்றினர்.

14.5.09 மதுரைசீடு நண்பர் ஆதரவாளர் பாரிகணேசன் இல்லவிழாவில் நிர்வாக அறங்காவலர் A.S.கார்த்திக்பாரதி, தொண்டர் பெரியசாமி கலந்து கொண்டனர்.
பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியாயின. மதுரை சீடு-இல் 100% தேர்ச்சி.

15.5.09 மதுரை சீடு வசந்த முகாம்-2009 துவக்க நாள். கோடையில் குழந்தைகள் விரும்பும் வசந்த முகாம் இன்று துவங்கியது. முகாமில் குழந்தைகளுக்கான உலகத் திரைப்படங்கள் திரையிடப்பட்டன. குதூகலம், கும்மாளம், உற்சாகம், ஆரவாரம், ஆனந்தம், கொண்டாட்டம் என ஆறு குழுக்களாக குழந்தைகள் பிரிக்கப்பட்டன். முதல் நாளான இன்று WHERE IS MY FRIEND'S HOME? என்ற ஈரானிய திரைப்படம் திரையிடப்பட்டது. பின் திரைப்படத்தையொட்டிய குழு விவாதமும் நடைபெற்றது. குழந்தைகளுக்கு கார்ட்டூன் வரையும் பயிற்சி அளிக்கப்பட்டது. பாடல் பயிற்சி வகுப்புகள், கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

16.5.09 வசந்தமுகாமின் இரண்டாம் நாளான இன்று "SALAAM BOMBAY" என்றஆங்கிலத் திரைப்படம் திரையிடப்பட்டது. திரைப்படம் பற்றி குழந்தைகள் விவாதம் செய்தனர். சிறப்பு பயிற்சியாக காய்கறிகளில் கலைவண்ணம் நிகழ்ச்சி நடைபெற்றது. குழு விளையாட்டுகள், பாடல் பயிற்சிகள், கிராமிய கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

17.5.09 வசந்தமுகாமின் மூன்றாம் நாளான இன்று "LE PEUPLE MIGRATOR" என்ற பறவைகள் பற்றிய பிரெஞ்சு ஆவணப்படம் திரையிடப்பட்டது. திரைப்படம் பற்றிய தங்கள் கருத்துக்களை குழந்தைகள் பகிர்ந்து கொண்டனர். குப்பைகள் மூலம் கலைப்பொருட்கள் செய்யும் பயிற்சி அளிக்கப்பட்டது. நட்பு, அன்பு சம்பந்தமான பாடல்களுக்கு குழந்தைகள் கலைநிகழ்ச்சிகள் வழங்கினர்.

18.5.09 வசந்தமுகாமில் "LIFE IS BEAUTIFUL" என்ற ஆங்கில திரைப்படம் திரையிடப்பட்டது. குழந்தைகளுக்கு பட்டம் செய்யும் பயிற்சி அளிக்கப்பட்டது. நகைச்சுவை ஊட்டும் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

19.5.09 வசந்தமுகாமில் இன்று "THE WAY HOME" என்ற கொரிய திரைப்படம் திரையிடப்பட்டது. வாழ்த்து அட்டைகள் செய்யும் பயிற்சி அளிக்கப்பட்டது. ரீமிக்ஸ் பாடல்களுக்கு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

20.5.09 வசந்தமுகாம் நிறைவு நாள். "CHILDREN OF HEAVEN" என்ற ஈரானிய திரைப்படம் திரையிடப்பட்டது. திரைப்படம் பற்றிய கருத்துகள், விமர்சனங்கள் பரிமாறப்பட்டன. நிறைவு நாளான இன்று குழந்தைகள் முகாம் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். குழந்தைகளுக்கு சான்றிதழ்கள், பரிசுகள் வழங்கப்பட்டன. அமெரிக்கன் கல்லூரியைச் சேர்ந்த சமூகப் பணித்துறை மாணவர்கள் வாறன்ஸ், சூர்யா, அனிஸ்தாமஸ், ஜீன்ஸ் ஜோசப், சேகர், ஜெஸ்டின், தீபா, கிரேஸ் லீனா மற்றும் சத்யா போன்றோர் கலந்து கொண்டுசிறப்பித்தனர்.
FCMRP-யின் 3ஆவது மாநில மாநாடு முதல் நாள். தென் மண்டல பிரதிநிதியாக முத்துகணேஷ் தேர்வு செய்யப்பட்டார்.

21.5.09 பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழகம் மற்றும் புதுவையின் 3வது மாநிலமாநாட்டில் தொண்டர்களாக R.பாஸ்கர்ராஜா, P.பாண்டியராஜன், M.மன்சூர் போன்றோர் பங்கு கொண்டனர். அது தவிரமாநாட்டில் மதிய உணவு பரிமாறும் பணியை பத்து சீடு இளைஞர்கள் மகிழ்ச்சியுடன் மேற்கொண்டனர்.

22.5.09 FCMRP 3வது மாநில மாநாடு நிறைவு நாள். FCMRP மாநில மாநாட்டின் பேரணி மற்றும் நிறைவுவிழா பொதுக்கூட்டத்தில் மதுரைசீடு குழந்தைகள் பேரவை உறுப்பினர்களுடன் அறங்காவலர்கள் கார்த்திக்பாரதி, அன்பரசன் மற்றும் இயக்குநர் மன்சூர் கலந்துகொண்டனர். மாநாட்டில் திய உணவு பரிமாறும் சேவைப்பணியை மதுரை சீடு இளைஞர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் மேற்கொண்டனர்.

23.5.09 இன்று பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் வெளியாயின. சிறப்பான மதிப்பெண்களுடன் மதுரை சீடு குழந்தைகள் 100% தேர்ச்சியை பெற்றிருந்தனர்.

24.5.09 சுவிஸ் ஆதரவாளர் தாரணி அவர்களுடன் SKYPE மூலம் கலந்துரையாடல்நடைபெற்றது.

25.5.09 பத்தாம் வகுப்பு முடித்த மாணவ, மாணவியருக்கு உயர்கல்வி பற்றிய வழிகாட்டுதல்களை நிர்வாக அறங்காவலர் A.S.கார்த்திக்பாரதி வழங்கினார்.

26.5.09 சுவிஸ் ஆதரவாளர் தாரணி அவர்களுடன் SKYPE மூலம் கலந்துரையாடல் நடைபெற்றது.

27.5.09 பதினோராம் வகுப்பு குழந்தைகளுக்கு புதிய பள்ளியில் சேர்ந்திட தேவையான உதவிகள் வழங்கப்பட்டன.

28.5.09 கல்லூரித் தேர்வுகள் தொடங்கின. மதுரை சீடு மூத்ததொண்டர் கணேஷ்பாபு திருமணத்தில் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

29.5.09 CESCI-இல் நடைபெற்ற தொண்டர் ஆஷாவின் கல்வி வழிகாட்டும் முகாமில் பத்து, பன்னிரெண்டாம் வகுப்பு முடித்த சீடு குழந்தைகள், இளைஞர்கள், தொண்டர் சரண்யா, அமுதா தலைமையில் கலந்து கொண்டனர்.

31.5.09 சீடு ஆதரவாளர் ஜான் அவர்களுடன் SKYPE மூலம் கலந்துரையாடல் நடைபெற்றது.

K.அன்பரசன் M.A.

**OXFORD**
UNIVERSITY PRESS

# Inspire
## The OUP Switzerland Newsletter
## Oxford English Testing to go live in June!

## Sharing classes with India –*Madurai Seed*

Teachers from Kantonsschule Freudenberg in Zürich have been travelling to India as volunteers for*Madurai Seed*: a private non-profit organisation that supports and empowers underprivileged children and young people from the poor area of Karumbalai in Madurai (Tamil Nadu).

Kantonsschule Freudenberg is now sponsoring an internet connection for*Madurai Seed* and teacher Laura Villiger is even using Skype to share an English class a week with the volunteer teachers in Madurai – what a great example of intercultural interaction!

OUP Switzerland has recently had the privilege of sponsoring books (from the*New English File*, *Oxford Word Skills*, and *Oxford Resource Books for Teachers* series) for *Madurai Seed*. If you would like to find out how you can help Indian children get fluent in English, do please get in touch withmaduraiseed1999@gmail.com.


இதழ் வெளியீட்டுக் குழு
**C.**அருண்குமார் **B.A**, (தொண்டர் பொறுப்பாளர்)
**V.**திவ்யபாரதி, **M.**மாணிக்கராஜ், **S.**முத்துகணேஷ், **S.**சர்மிளா

குழந்தைகளின் புதுயுகம் தனிச்சுற்று சிற்றிதழ் வெளியீட்டு முயற்சிக்கு உதவுவோர்
**Dr.**மெல்லியல் அண்ணாமலை, சென்னை ஆஷா குழுவினர்
திருமிகு.வே.மாரியம்மாள், திருமிகு. அ.ச.கார்த்திக்பாரதி, திருமிகு. க.அன்பரசன்
மதுரை சீடு நிர்வாகக் குழு



தொடர்புக்கு : புதுயுகம் சிற்றிதழ்
மதுரை சீடு
அர்ஜீன் சண்முகா இல்லம், 439/1, கிழக்குத் தெரு, கரும்பாலை,மதுரை-20.
பேசி : 9894805446, 94425 37670, 0452-22537670
மின்னஞ்சல் : **maduraiseed1999@gmail.com**
வலைதளம் : **www.ashanet.org # seednarpanigal**
**www.madurai-seed.org**


***மதுரை சீடு அறக்கட்டளை நலிவுற்ற குழந்தைகள், இளைஞர்கள் மேம்பாடு மற்றும் குழந்தைகள் உரிமைக்காகவும், வளமைக்கல்விக்காகவும், பணி செய்யும் ஓர் தன்னார்வ தொண்டு நிறுவனமாகும்.***